12.03.2026.

<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )</u>

<u>விழுப்புரம்</u>

<u>அமர்வு வழக்கு எண்.296/2025</u>

அ.சா.3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பரணிநாதன் | | |
| த/பெ | கண்ணப்பன் | | |
| கிராமம் | விழுப்புரம் | தொழில் | காவல் ஆய்வாளர், |
| லுக்கா | விழுப்புரம் | வயது | 56/2026 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 16.03.2026. |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிராமணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது மரக்காணம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28/12/2021ம் தேதி விழுப்புரம் தாலுக்கா காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது, அன்றைய தினம் மாலை 16.00 மணிக்கு நான் மற்றும் எங்கள் காவல் நிலையத்தில் பணிபுரிந்த முதல்நிலை காவலர் தேவசேனா, தலைமை காவலர் கருணாகரன் ஆகியோர்களுடன் போதைப் பொருட்கள் தடுப்பு சம்பந்தமாக கண்காணித்துக் கொண்டிருந்தபோது, விழுப்புரம் சாலாமேடு பகுதியை சேர்ந்த செல்வம் த/பெ.மண்ணாங்கட்டி, துரையரசன் நகர், என்பவரின் கடையில், அரசால் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்களை வெள்ளை நிற சாக்கு பையில் அவரது கடைக்கு முன்பு வைத்து விற்பனை செய்து கொண்டிருந்தார். அவர் போலீசாராகிய எங்களை கண்டதும் ஓட முயற்சி செய்தார். அவரைப் பிடித்து விசாரித்ததில் அவர் பெயர் செல்வம் வயது 48 த/பெ.மண்ணாங்கட்டி, துரை அரசன் நகர், சாலாமேடு, என்று சொன்னார். அவர் அந்தப் பையில் 1)ஹான்ஸ் - 40 பாக்கெட்டுகள், Cool lip -

20 பாக்கெட்டுக்கள், சட்டவிரோதமாக வைத்திருந்தவரை 16-15 மணிக்கு, மேற்கண்ட காரணத்தை சொல்லி நான் கைது செய்து, 16-30 மணிக்கு அந்நிய சாட்சிகள் யாரும் இல்லாததால், மேற்சொன்ன முதல் நிலைக் காவலர் தேவசேனா, தலைமை காவலர் கருணாகரன் ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தேன். அந்த கைப்பற்றுதல் மகசரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றப்பட்ட பொருட்கள் ஹான்ஸ்-40 பாக்கெட்டுக்கள், Cool Lip-20 பாக்கெட்டுகள், ஆகியவை என்னிடம் காண்பிக்கப்படுவது தான். சாட்சி அதை சரியாக அடையாளம் காண்பித்தார். அந்த சான்று பொருட்கள் சா.பொ.1 வரிசை ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிறகு எதிரியை 17-30 மணிக்கு காவல் நிலையம் கொண்டு வந்து பாராவிடம் ஒப்புவித்து, நிலைய குற்ற எண்.1473/2021 இ.த.ச. பிரிவுகள் 328, மற்றும் 24 (1), 6 COTPA ACT -ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த அச்சு முதல் தகவல் அறிக்கையை விழுப்புரம் நீதித்துறை நடுவர் எண் 1 அவர்களுக்கும், அதன் பிரதியை உயரதிகாரிகளுக்கும் முறையாக அனுப்பி வைத்தேன். சாட்சிகள் கருணாகரன், தேவசேனா ஆகியோர்களை விசாரணை செய்து, தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு எதிரி செல்வம் த/பெ.மண்ணாங்கட்டி என்பவரை உச்சநீதிமன்ற கட்டளைகளை பின்பற்றி, முறையாக நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். என்னால் எதிரி செல்வத்தை பார்த்தால் அடையாளம் காண்பிக்க முடியும். சாட்சி ஆஜரில் உள்ள எதிரியை சரியாக அடையாளம் காண்பித்தார். பின்பு வழக்கு சொத்தினை படிவம் - 95 ன் மூலம் நீதிமன்றத்திற்கு முறையாக அனுப்பி வைத்தேன். அந்த படிவம் - 95 அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிறகு என் விசாரணை முடித்து மேற்படி எதிரி செல்வம் த/பெ.மண்ணாங்கட்டி என்பவர் மீது இ.த.ச. பிரிவுகள் 328, மற்றும் 24 (1), 6 COTPA ACT -ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். அனைத்து ஆவணங்களையும் முறையாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது நான் தான். இந்த வழக்கின் விசாரணை அதிகாரியும் நான் தான் என்றால் சரிதான். இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த

பிறகு பார்வை மகசர் தயார் செய்தேனா? என்றால், இல்லை. இந்த வழக்கில் என்னுடன் உள்ள காவலர்களை தவிர, தனி நபர்களை சாட்சிகளாக விசாரணை செய்தேனா? என்றால் இல்லை. நான் தயார் செய்த முதல் தகவல் அறிக்கையில், இ.த.ச.பிரிவுகளும், COTPA ACT பிரிவுகளும் வருகிறது என்றால் சரிதான். நான் கைப்பற்றியதாக சொல்லப்படும் புகையிலைப் பொருட்கள் HANS மற்றும் Cool lip ஆகியவை விஷத்தன்மை உடையதா? என்பதை கண்டறிய தடயவியல் துறைக்கு அனுப்பி வைத்துள்ளேனா? என்றால், இல்லை. 24(1) COTPA ACT நிரூபணம் செய்ய அங்கே அருகாமையில் வீடுகளோ அல்லது கடைகளோ மற்றும் கல்வி நிறுவனங்களோ உள்ளது என்பதை காண்பிக்க நான் யாரையும் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல செல்வம் கடையிலிருந்து புகையிலை பொருட்கள் கைப்பற்றப்படவில்லை என்றும், வேறு எங்கோ கைப்பற்றிய பொருட்களை புள்ளியியல் கணக்கிற்காக எதிரியிடமிருந்து கைப்பற்றியதாக பொய்யான வழக்கை போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

<u>இல்லை</u>